முருகப்பெருமான் துணை

**மகான் விசுவாமித்திரர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.06.2022, வெள்ளிக்கிழமை

1. யோகராசனே அரங்கா போற்றி
உயர்வான ஞான சமூகம்
செகமதனில் படைக்க அவதரித்த
செந்தூரானின் சூட்சும வடிவே அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது மிதுன திங்கள்
வரங்களென சூலதிகதி புகர் வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 03 நாள், 17.06.2022 வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே விசுவாமித்திரர் யானும்
தரணியே வளமுற உரைப்பேன்
உண்மை நெறி காட்டும் ஞானி
ஓங்காரக் குடிலாசான் வழிகளை
4. வழிகளை கலியுக மக்கள்
வணங்கி ஏற்று வர
தெளிவுதிடம் அடைவதுடன்
தேவர்கள் போற்றும் தருமகுணம்
5. தருமகுணம் தயவுகுணம் பெருகி
தரணியில் முழுமை காண்பர்
பெருமை மிக்க சூட்சும ஆற்றல்
பெருந்தயவாக குருவழி அடைந்து
6. அடைந்துமே அரங்கமகானின்
அருளாசி வழி உலகோர் தானும்
தடையின்றி ஞான சித்தியும்
தவத்தன்மையும் கூடி நிற்பர்
7. நிற்கவே உலகை மாற்றும்
நீதிமானாக வந்த அரங்கன்
அற்புதம் உலகம் அறியவே
அநீதிகள் விலகி அமைதி பாதுகாப்பு
8. காப்புடன் வளர்ச்சி நிலை
கருணைமிக்க ஆளுமையாக
ஒப்புகொண்டு எங்கும் மாற்றம்
ஓங்காரன் தயவால் காணும்
9. காணவே சன்மார்க்க மெனும்
கந்தப் பெருமான் ஆசிபட
ஞானம் உலகம் தனில் பரவ
ஞானவான்கள் எனும் பலம்

10. பலம் உலகமெல்லாம் கூடி
பழுதில்லா ஞான ஆட்சி
வலம் வரும் ஞானிகள் துணையாக
வையகம் பெருமாற்றம் காணும்

11. காணவே அரங்கன் தலைமை
கலியுகம் ஞானவழி ஏற்றிட
தானாக ஞானயுகமாற்றம் பெறும்
தாமுரைத்த அருளாசி முற்றே

–சுபம்–